# வடபழநி மெட்ரோவில் பறையாட்டம்

சென்னை, பிப். 24–
வடபழநி மெட்ரோவில், இசை விழாவையொட்டி பறையாட்டம் நடந்தது.

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம், தமிழ் கலாசாரம், பாரம்பரியத்தை கொண்டாடும் நோக்கில், சென்னை முழுவதும் உள்ள, இசை கலைஞர்கள் மற்றும்,அமைப்புகளுடன் இணைந்து, இசை, கலை விழாக்களை நடத்தி வருகிறது.

இதையொட்டி, வடபழநி மெட்ரோ நிலையத்தில், நேற்று நிமிர்வு கலையகம் சார்பில், பறையாட்டம், கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.



வடபழநி மெட்ரோ ரயில் நிலையத்தில் நடந்த இசை விழாவில், 'நிமிர்வு கலையகம்' சார்பில், நேற்று பறையாட்டம் நடந்தது.